Improvements for Polivakkam Chitheri

* 340 Q.—THIRU A. PARANDHAMAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether there is any proposal under the consideration of the Government to improve "Polivakkam Chitheri" in Tiruvallore taluk; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ப உ. சண்முகம் : (அ) & (இ) ரூ. 78,000 மதிப்பீட்டில் குளத்தின் கரையை சீர்படுத்தி மதகு கலிங்கல் ஆகியவைகள் கட்டுவதற்கும் ஆழப் பகுதியில் அலைகல் கட்டுவதற்கு மான ஓர் திட்டம் பாசனத் தலைமைப் பொறியாளரால் செங்கற் பட்டு மாவட்ட ஆட்சியருடன் கலந்து பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

திரு. ஆ. பரந்தாமன் : போளிவாக்கம் சித்தேரியை மேம் படுத்தும் திட்டத்திற்கு செங்கற்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் கூட்ட ஒப்புதல் தந்துவிட்டார்கள். பொறியாளருடன் கூட ஒப்புதல் தந்துவிட்டார்கள். ரெவின்யூ போர்ட் அதற்கான நிதி உதவியைத் தருவார்களா?

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் : நிதி ஒதுக்குவது ரெவின்யூ போர்ட் அல்ல. அவர்கள் சிபார்சு செய்த பிறகுதான் அரசு நிதி ஒதுக்க வேண்டும். அரசாங்கத்திற்கு வந்த பிறகு அரசாங்கம் பரிசிலிக்கும்.

காரையார்-திருவனந்தபுரம் இணைப்புப் பாதை.

* *341* **வினா—திரு. ச. சங்குமுத்து தேவர் :** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், மேற்குத் தொடர்ச்சி பாபநாசம் மலைப் பகுதி காரையார் செல்லும் ரோட்டின் மார்க்கமாகத் திருவனந்தபுரம் பகுதிக்குப் புதிதாக ரோடு அமைக்கும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?